<u>செய்தி வெளியீடு எண்: 419</u>　　　　　<u>நாள்: 10.7.2007</u>

**பத்திரிகைச் செய்தி**

தமிழ் நாட்டிற்கு, ஹஜ் 2007—ற்காக நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடான 2700—க்கு மாறாக, 6800+14(குழந்தைகள்) விண்ணப்பங்கள் புனிதப் பயணிகளிடமிருந்து தமிழ் நாடு மாநில ஹஜ் குழு பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, அனைத்து விண்ணப்பங்களையும் ஏற்கும் வகையில் கூடுதல் ஒதுக்கீடு வழங்க, மைய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், தமிழ் நாட்டிற்கு திருத்திய ஒதுக்கீடாக 3384 இடங்களை அளித்துள்ளதுடன், அவற்றிற்கான புனிதப் பயணிகளைத் தெரிவு செய்ய குலுக்கல் (குறா) நடத்துமாறு மும்பை, மத்திய ஹஜ் குழு அறிவுறுத்தியுள்ளது.

2. அதனடிப்படையில், தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, ஹஜ் 2007—க்கு, திருத்திய ஒதுக்கீடான 3384 இடங்களுக்கு புனிதப் பயணிகளைத் தெரிவு செய்ய குலுக்கல் (குறா) நடத்த முடிவு செய்துள்ளது. இந்தக் குலுக்கல் நிகழ்ச்சி, <u>14—7—2007 அன்று காலை 10.00 மணியளவில்</u>, சென்னை, இராயப்பேட்டை, புதுக்கல்லூரியிலுள்ள, ஆனைக்கார் அப்துல் ஷுக்கூர் அரங்கத்தில் நடைபெறும். தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவர் அவர்கள் தலைமை தாங்கி இந்நிகழ்ச்சியை துவக்கி வைக்க உள்ளார்.

3. ஹஜ் 2007—ற்காக, தமிழ் நாடு மாநில ஹஜ் குழு மூலமாக விண்ணப்பித்துள்ள புனிதப் பயணிகள் அல்லது குழுவிலுள்ள உறுப்பினர்கள் இக்குலுக்கலில் (குறாவில்) கலந்து கொண்டு நிகழ்ச்சியினைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

***********

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.**